
பக்கங்கள்:-17

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 30 | செவ்வாய்க்கிழமை | 13.02.2024 | அதிர்வு 196

## பலாலியில் காணிகளை விடுவிக்க நடவடிக்கை



யாழ்ப்பாணம், பலாலி கிழக்குப் பகுதியில் உயர் பாதுகாப்பு வலயமாகக் காணப்படும் காணிகளில் சில 06▶



### ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறுமா?

# என்ன நடக்கப் போகின்றது என எமக்கு ஒன்றுமே புரியவில்லை

### ரணிலுக்கும் குழப்பம் என்கிறார் மைத்திரி

“இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுமா, ஜனாதிபதிப் பதவியை இல்லாமல் செய்வதற்கான மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு நடைபெறுமா அல்லது நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுமா என நிச்சயமாகத் தெரிவிக்க முடியாமல் இருக்கின்றது. என்ன செய்வதென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தெரியாமல் இருக்கும்.”

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். 06▶

## சீனாவுடனான உறவை நிறுத்த சொல்லவில்லையாம் இந்தியா

### இப்படிக் கூறுகின்றது தேசிய மக்கள் சக்தி

“சீனாவுடன் கொடுக்கல் – வாங்கலில் ஈடுபட வேண்டாம் என இந்தியா எம்மிடம் கூறவில்லை. அது பற்றி பேச்சு நடத்த நாமும் முற்படவில்லை. எனினும், பிராந்தியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் விடயங்களுக்கு அனுமதியளிக்கமாட்டோம் என்பதை நாம் கூறினோம்.” 06▶






சிலரிடம் ஒரு பழக்கம் உண்டு. வினையை விலைக்குத் தேடி வாங்குவார்கள்.

தேவையில்லாமல் அதிகப்பிரசங்கித்தனம் பண்ணி, பிரச்சினையைத் தேடி வாங்குபவர்களை என்னவென்று சொல்வது..? அதற்கு ஓர் உதாரணம் இது.

பாடசாலைகள் விடுமுறைக்குப் பின்னர், (கடந்த ஆண்டுக்கான) 3ஆம் தவணைப் பரீட்சை தற்போதுதான் இடம்பெறுகின்றது.

வடக்கு மாகாணக் கல்வித் 06▶

# குளவி கொட்டுக்கு இலக்கான தனியார் வகுப்பு மாணவர்கள்!

## மஸ்கெலியா வைத்தியசாலையில் சிகிச்சை

**(மஸ்கெலியா நிருபர்: செ.தி.பெருமாள்)**

நல்லதண்ணி பொலிஸ் பிரிவில் உள்ள நல்லதண்ணி தமிழ் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 13 வயது உடைய மாணவ, மாணவிகள் நேற்று மாலை 6 மணிக்கு தனியார் வகுப்புக்கு சென்று திரும்பும் வேளையில் குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில் மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்க பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ்வாறு தனியார் வகுப்புக்கு சென்று திரும்பும் வேளையில் 3 ஆண் மாணவர்களும், 9 பெண் மாணவியர்களுமே இவ்வாறு குளவிக் கொட்டுக்கு இலக்காகினர் என்று நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சாந்த வீரசேகர தெரிவித்தார்.



# உன்னிச்சை கிராமத்தில் யானைகள் அட்டகாசம்!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

மட்டக்களப்பு ஆயத்திமலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உன்னிச்சை கிராமத்தில் அதிகாலை வேளையில் காட்டு யானைகள் நடத்திய அட்டகாசத்தில் பொருளாதார ரீதியில் மிகவும் கஷ்டமான குடும்பமொன்றின் வீடு சேதத்திற்குள்ளாகியுள்ளது.

வீட்டில் அனைவரும் தூக்கத்திலிருந்த வேளையில் அதிகாலை 5 மணியளவில் உன்னிச்சை கிராமத்திற்குள் புகுந்த இரண்டு காட்டு யானைகள் வீடொன்றை மிக மோசமாக தாக்கியுள்ளன. வீட்டிலிருந்தவர்கள் கூக்குரலிடவே அருகிலிருந்த அயலவர்களும் சத்தமிட்டதனை தொடர்ந்து காட்டு யானைகள் இரண்டும் காட்டுக்குள் விரட்டியடிக்கப்பட்டன என அயலவர்கள் தெரிவித்தனர்.

அண்மைக்காலமாக உன்னிச்சை கிராமத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகிறது. மனித உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் தொடர்ச்சிதாக சேதம் ஏற்பட்டு வருகிறது. இது விடயமாக சம்பத்தப்பட்ட அதிகாரிகளுக்கு பல முறை தெரியப்படுத்தியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.





# இணையப் பாதுகாப்புச் சட்டம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு அதிருப்தி




(ந.லோகதயாளன்)

இலங்கையின் நாடாளுமன்றம், உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகளை புறந்தள்ளி, இணையத்தள நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் சட்டத்தை நிறைவேற்றியுள்ளமை குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தனது ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளது.

மிகவும் சர்ச்சைக்குரிய இணையப் பாதுகாப்புச் சட்டம் இந்த ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி தனிப்பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேறியது. எனினும் உயர் நீதிமன்றம் இது நாடாளுமன்றாத்தில் மூன்றில் இரண்டு பெருமான்மையினால் நிறைவேற்றப்பட வேண்டுமென கூறியிருந்தது.

இணையத்தளப் பாதுகாப்புச் சட்டத்தை கவனமாக ஆராய்ந்த பின்னர், அதிலுள்ள பல பிரிவுகள் உயர்நீதிமன்றத் தீர்ப்பிற்கு அமைவாக இல்லை என்பதும், அதில் பல அம்சங்கள் விடுபட்டுள்ளன என்பதையும் அவதானிக்க முடிவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கூறுகிறது.

உயர்நீதிமன்றத்தின் உத்தரவிற்கு அமையவே இந்த இணையத்தளப் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது என நாடாளுமன்றத்தின் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்து மூன்று நாள்கள் கடந்துள்ள நிலையில் இந்த விடயத்தை ஆணைக்குழு வெளிப்படுத்தியுள்ளது.

இந்த சட்டமூலத்திற்கு எதிராக 51 மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், கடந்த 2023ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7ஆம் திகதி நீதிமன்றம் தீர்ப்பை அறிவித்தது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், ஊடக நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ செயற்பாட்டுக் குழுக்கள் உட்பட பலர் இந்த மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர். அவ்வகையில் "மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மாத்திரமே இந்த மசோதாவை சட்டமாக நிறைவேற்ற முடியும்" என் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அது மாத்திரமின்றி அந்த சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டால் அதை தனிப்பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்ற முடியுமெனவும் நீதிமன்றம் தெரிவித்திருந்ததாக ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த மனுக்கள் மீதான விசாரணையின் போது அந்த மசோதாவிலுள்ள 56 பிரிவுகளில் 31 திருத்தப்பட வேண்டும் என உயர் நீதிமன்றம் கண்டறிந்திருந்தது. எனினும், இந்த பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என ஆணைக்குழு கூறியுள்ளது.

சபாநாயகருக்கு எழுதிய கடிதத்தில், இணையத்தளப் பாதுகாப்புச் சட்டத்திலுள்ள தொழில்நுட்ப ரீதியிலான தவறுகளை ஆணைக்குழு விவரித்துள்ளது.

"அந்த மசோதாவில் இருந்த 30 பிரிவுகள் அரசியல் சாசனத்தின் பிரிவு 12 (1) இசைவாக இல்லை, மேலும் சில அம்சங்கள் பிரிவு 14 (1) (அ) ஆகிய பிரிவுகளுக்கு எதிராக உள்ளன" என நீதிமன்றம் கூறியுள்ளது. அந்த திருத்தங்கள் செய்யப்படாத நிலையில், உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பிற்கு ஏற்ற வகையில் அந்த சட்டம் இயற்றப்படாமை குறித்து ஆணைக்குழு கரிசனை வெளியிட்டுள்ளது.

"உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை முழுமையாக ஏற்று அதை செயல்படுத்தத் தவறியமை, அந்தச் சட்டத்தின் தற்போதைய வடிவம் குறித்தும், நாடாளுமன்றத்தில் தேவையான அளவிற்கு வாக்குகளை பெறாமை குறித்தும் ஆழ்ந்த கவலை எழுகிறது" என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் முன்னாள் நீதியரசர் எல்.டி.பி. தெஹிதெனிய கூறியுள்ளார்.

"ஆக்கபூர்வமாக, நிறுவன ரீதியாக சீர்த்திருத்தங்களை முன்னெடுப்பதில் ஈடுபடாமல், இதை முன்னெடுத்துச் செல்லுவது குறித்து நாங்கள் அரசை எச்சரித்திருந்தோம்" என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சபாநாயகருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் அமைப்பான சர்வதேச மன்னிப்புச் சபை, இலங்கையில் "கருத்துச் சுதந்திரத்தை நசுக்கவும், எதிர்ப்புகளை ஒடுக்கவும் அரசின் ஆயுதங்களில் புதிதாக சேர்ந்துள்ள ஒரு விடயம்." இதுவென விமர்சித்துள்ளது.

அதேபோன்று அப்பிள், அமெசான், கூகள் மற்றும் யாஹூ போன்ற அமைப்புகளை உறுப்பினராகக் கொண்டுள்ள ஆசிய இணையதள கூட்டமைப்பு இந்த சட்டத்தில் பரந்துபட்ட திருத்தங்கள் தேவை எனவும், இந்த சட்டமானது நாட்டிற்கு வரக்கூடிய முதலீடுகளை பாதிக்கும் எனவும் எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கையடக்க தொலைபேசி சிம் அட்டையை முறையாகப் பதிவு செய்வதற்கு அறிவுறுத்து

கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தும் ஒவ்வொருவரும் தமது சிம் அட்டையை முறையாகப் பதிவு செய்ய வேண்டும் என இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் இது குறித்து ஊடகங்களுக்கு மேலும் தெரிவிக்கையில்,

"தற்போது நீங்கள் பயன்படுத்தாத கையடக்கத் தொலைபேசிகளிலும் உங்கள் பெயரில் சிம் அட்டை பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்க்க சிம் அட்டையின் நிறுவன முகவர்களுடன் தொடர்பு கொண்டு சரிபாருங்கள்.

உங்களுக்குத் தெரியாமல் சிம் அட்டைகள் பதிவுசெய்திருப்பின் அவற்றை உடனடியாகத் துண்டித்துக்கொள்ளுங்கள்.

உங்கள் தேசிய அடையாள அட்டை எண்ணின் கீழ் உங்களுக்குத் தெரியாமல் சிம் அட்டைகள் வழங்கப்பட்டிருந்தால், அவற்றின் இணைப்பைத் துண்டிப்பது மிகவும் முக்கியம்" – என்றார்.

# பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பொலிஸாருக்குக் கொடுப்பனவு உயர்வு




(ந.லோகதயாளன்)

நாடு கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள அதேவேளை, வருமான வரி மற்றும் இதர வரிகள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், இன்று செவ்வாய்க்கிழமை முதல் பொலிஸாருக்கு உணவு மற்றும் தங்குமிடக் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படவுள்ளன.

அதன் அடிப்படையில் முதல் கட்டமாக அடுத்த ஆறு மாதங்களுக்கான கொடுப்பனவையும், அடுத்த கட்டத்தில் நிலுவைத் தொகையுடன் கூடிய அதிகரித்த கொடுப்பனவையும் பொலிஸார் பெற்றுக்கொள்ளவுள்ளனர் எனப் பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலர் வியானி குணதிலக கூறியுள்ளார்.

அரசாங்கத்தின் இந்த அறிவிப்பின்படி சார்ஜன்ட் நிலையில் இருக்கும் ஒருவருக்கு 2,340 ரூபா முதல் 4,230 ரூபா வரையிலும், சப் இன்ஸ்பெக்டர் நிலையிலிருந்து தலைமை இன்ஸ்பெக்டர் தரத்திலான அதிகாரிகளுக்கு 3,060 ரூபா முதல் 4,320 ரூபா வரையிலும், உதவி பொலிஸ் கண்காணிப்பாளர் முதல் பொலிஸ் மா அதிபர் போன்ற உயரதிகாரிகளுக்கு மாதம் 4,140 ரூபா வரையில் கொடுப்பனவுகள் மேலதிகமாகக் கிடைக்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, பொலிஸாருக்கு வழங்கப்படும் உணவு மற்றும் தங்குமிட கொடுப்பனவு 18,930 ரூபா முதல் 25,140 ரூபா வரை காணப்படும் என்பதோடு, ஆறு மாதங்களில் நிலுவைத் தொகையுடன் வழங்கப்படுமென, பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் ரணில் விக்ரமசிங்க அரசாங்கம் தெரிவித்துளது.

கொடுப்பனவு அதிகரிப்பு கடந்த மாதம் முதல் நடைமுறைப் படுத்தப்படவிருந்த போதிலும் திறைசேரி நிதியை விடுவிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக அது ஒத்திவைக்கப்பட்டது. திறைசேரி நிதியை விடுவிக்கும் வரை தனது சொந்த நிதியில் இருந்து பணம் செலுத்துவதாக பொலிஸ் திணைக்களம் ஒப்புக்கொண்டதாக அந்த அதிகாரி கூறியுள்ளார்.

நாட்டில் ஆயிரக்கணக்கான அரச ஊழியர்கள் உள்ள நிலையில், பொலிஸாருக்கு மாத்திரம் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளமையானது பல கேள்விகளை எழுப்பக் கூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

போராட்டங்களை கட்டுப்படுத்துவது, போதைப் பொருள்களுக்கு எதிரான அதிரடி சோதனை மற்றும் புலனாய்வுப் பிரிவில் உள்ளவர்களுக்கு மேலதிகமாக, அவர்களின் அடிப்படை ஊதியத்தில் நான்கில் ஒரு மடங்கு அதிகரிக்கும் என அரசு அறிவித்துள்ளது.

இது கடந்த 2023ஆம் ஆண்டின் ஆய்வறிக்கையின் அடிப்படையில், அமைச்சரவையில் ஒப்புதலை அடுத்து நடைமுறைக்கு வருமென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எனினும், ஓய்வு பெற்ற ஜனாதிபதிகளின் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள பொலிஸ் பிரிவைச் சேர்ந்தவர்கள், அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பிற்கு உள்ளவர்கள் மற்றும் விசேட அதிரடிப் படையினர் மற்றும் புலனாய்வுப் பிரிவினருக்கு அடிப்படை ஊதியத்தில் மூன்றில் ஒரு பங்கு உயர்த்தப்பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக, கடந்த வருடத்தின் முதல் ஒன்பது மாதங்களில் தகுதி வாய்ந்த 8,381 அதிகாரிகளுக்கு பதவி உயர்வும் வழங்கப்பட்டுள்ளது. அதில் 4,587 பேர் கொன்ஸ்டபிள் தரத்திலிருந்து சார்ஜன்ட் தரத்திற்கு உயர்த்தப்பட்டனர்.

2,297 பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படை உறுப்பினர்கள் தங்கள் பதவிகளை விடுவிப்பதற்கான ஆவணங்களை சமர்ப்பித்துள்ள நிலையில், 910 அதிகாரிகள் நேர்காணலுக்குப் பின்னர் சேவையில் மீண்டும் இணைத்துக் கொள்ள தகுதி பெற்றுள்ளனர்.

மேலும் 62 அதிகாரிகளை மீண்டும் பணியில் அமர்த்துவதற்கு பொதுச் சேவை ஆணைக்குழுவிடமிருந்து பொலிஸாரினால் பரிந்துரை கோரப்பட்ட போதிலும், கடந்த வருடம் ஜனவரி முதல் செப்டெம்பர் வரை இலங்கை பொலிஸுக்கு புதிதாக ஆட்சேர்ப்பு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

# அவசரமாகத் தரையிறக்கப்பட்டது ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் விமானம்

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் விமானமொன்று மெல்பேர்ன் விமானநிலையத்தில் அவசரமாக தரையிறங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மெல்பேர்னிலிருந்து கொழும்பிற்கு புறப்பட்ட விமானம் புறப்பட்ட சில நிமிடங்களில் தொழில்நுட்ப கோளாறு காரணமாக திரும்பி விமான நிலையத்தில் பாதுகாப்பாகத் தரையிறக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அனைத்துப் பயணிகளும் பாதுகாப்பாக உள்ளனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது




அத்துடன், பொறியியலாளர்கள் குழுவொன்று விமானத்தை ஆராய்ந்து தொழில்நுட்ப உதவிகளை வழங்கியது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# 6ஆம் தரத்திற்கு மாணவர்கள் இணைப்பு: இன்று முதல் மேன்முறையீடு செய்யலாம்!

2023 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில், மாணவர்களை 2024 ஆம் ஆண்டு ஆறாம் தரத்தில் சேர்ப்பது தொடர்பான மேன்முறையீடுகளை இன்று முதல் சமர்ப்பிக்க முடியுமென கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்த விண்ணப்பங்கள் தொடர்பான மேன்முறையீடுகளை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை இணையவழியாக அனுப்பி வைக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்துக்கு பிரவேசித்து 3 பாடசாலைகளுக்காக மாத்திரம் மேன்முறையீட்டை சமர்ப்பிக்க முடியுமெனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# 22 வயது காதலன் மீது கத்திக்குத்து தாக்குதல் நடத்திய 19 வயது காதலி

தனது 22 வயது காதலன்மீது 19 வயது காதலி கத்திக் குத்து தாக்குதல் நடத்தியுள்ள பயங்கர சம்பவம் கம்பளையில் இடம்பெற்றுள்ளது.

கம்பளை, பொதுசந்தை பகுதியில் உள்ள மீன் கடையொன்றிலேயே நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது,

கத்திக்குத்து தாக்குதல் நடத்திய யுவதி கம்பளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட அவரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கம்பளை, உலப்பனை பகுதியச் சேர்ந்த 19 வயது யுவதியும், 22 வயது இளைஞர் ஒருவரும் ஒன்றரை வருடங்களாகக் காதலித்து வந்துள்ளனர். இந்நிலையில் காதல் தொடர்பை இளைஞர் துண்டிக்க முற்பட்டுள்ளார். இதனால் இருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. தாம் ஜோடியாக இருக்கும் படத்தை முகநூல் பக்கம் யுவதி பதிவிட்டுள்ளார். இதனால் கடுப்பான இளைஞர் அவரைத் தாக்கியுள்ளார்.




இதையடுத்து யுவதியின் சகோதரனும், தாயும் இளைஞர் இருக்கும் இடத்துக்கு வந்து, இது பற்றி விசாரித்துள்ளனர். இதன்போது யுவதியின் சகோதரனை மேற்படி இளைஞர் தாக்கியுள்ளார். அவர் கம்பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அதன்பின்னர் மீண்டும் வந்த யுவதி, தான் காதலித்த இளைஞர் மீது சரமாரியாக கத்திக்குத்து தாக்குதல் நடத்தியுள்ளார். படுகாயம் இடைந்த இளைஞர் கம்பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

# பூஸா சிறைக்குள் புதைக்கப்பட்டிருந்த தொலைபேசிகள், சிம் அட்டைகள் மீட்பு



அதியுயர் பாதுகாப்புடன் கூடிய பூஸா சிறைச்சாலையில் பூமிக்கடியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஒரு தொகை கையடக்கத் தொலைபேசிகளும், உதிரிப் பாகங்களும் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் விசேட செயலணி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சிறைச்சாலையில் ஏ மற்றும் பி பிரிவு பகுதிகளில் மண்ணைத் தோண்டி பூமிக்கடியில் மிகக் கச்சிதமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே மேற்படி கையடக்கத் தொலைபேசிகளும், உதிரிப்பாகங்களும் மீட்கப்பட்டுள்ளன என்று அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஒரு ஸ்மார்ட் போன் கையடக்கத் தொலைபேசி, சிறு அளவிலான இரண்டு கையடக்கத் தொலைபேசிகள், நான்கு சிம் கார்ட், ஒரு மெமரி சிப், இரண்டு கையடக்கத் தொலைபேசி சார்ஜர்கள், இரண்டு டேட்டா கேபிள்கள், ஒரு ஹான்ப்ரி உள்ளிட்டவைகளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன என்றும் அந்த அதிகாரிகள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திணைக்களம் மாகாண மட்டத்தில் பரீட்சை வினாத் தாள்களைத் தயாரித்து பாடசாலைகளுக்கு வழங்கி வருகின்றது.


இதில் அடுத்த மே மாதம் க.பொ.த சாதாரணப் பரீட்சை எழுத வேண்டிய தரம்11 மாணவர்களுக்கும் பரீட்சை இடம்பெறுகின்றது.

இதிலே தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்திற்கான பரீட்சை வினாத்தாளைத் தயாரித்த ஒருவர் அதில் தனது வித்துவத்தை – கைவரிசையை – காட்டப் புறப்பட்டு தற்போது கல்வித் திணைக்களம், அரசியல் தரப்புகள், புலனாய்வுப் பிரிவு என சகலரின் கழுகுப் பார்வையிலும் விழுந்திருக்கின்றார்.

இந்தப் பாடத்திற்கான ஒரு கேள்வி பின்வருமாறு அமைந்துள்ளது:–

‘ஒரு நாடு இருதேசம்’ எனத் தமிழர்கள் முழங்கினர். இவ்வாக்கியம் 1.தனிவாக்கியம் 2. கலப்பு வாக்கியம்
3. தொடர்வாக்கியம் 4. கூட்டு வாக்கியம்
– இதுதான் வினாவாகும்.

இதற்கு விடை என்னவோ கலப்பு வாக்கியம்தான். ஆனால்


5275
மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
மூன்றாம் தவணைப் பரீட்சை – 2023(2024)
பகுதி I

இந்த வினாவைத் தயாரித்தவர் தொடர்பான தகவல் இனி வரும் நாள்களில் க(ஓ)லப்பு வாக்கியமாக வந்து முடியாவிட்டால் சரி.....!

## என்ன நடக்கப் போகின்றது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த வருட இறுதியில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என அரசு அறிவித்துள்ள நிலையில், ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல் விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியுள்ளது. இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் இந்த வருடம் இடம்பெறும் என ஜனாதிபதி மற்றும் அரச தரப்பினர் ஆரம்பத்திலிருந்து தெரிவித்து வருகின்றனர். தற்போது ஜனாதிபதி தேர்தல் தொடர்பாகக் கட்சிகளுக்கிடையில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. அதேபோன்று கூட்டணி அமைத்துக்கொண்டு ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவது தொடர்பாகவும் கட்சிகளுக்கிடையில் பேசப்பட்டு வருகின்றன.

ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிப் பதவியை இரத்துச் செய்வதற்காக முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் சட்டத்தரணிகள் குழுவொன்றை நியமித்து, அரசமைப்பில் திருத்தம் மேற்கொண்டு, ஜனாதிபதிப் பதவியை இல்லாமல் செய்வதற்குத் தற்போது வேகமாகச் செயற்பட்டு வருகின்றார். இது தொடர்பாக தற்போது நாட்டுக்குள் பாரியளவில் பேசப்பட்டு வருகின்றது.

அதனால் இவ்வாறான நிலையில், இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுமா, ஜனாதிபதிப் பதவியை இல்லாமல் செய்வதற்கான மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு நடைபெறுமா அல்லது நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுமா என நிச்சயமாகத் தெரிவிக்க முடியாமல் இருக்கின்றது. அதனால் தற்போதுள்ள நிலைமையில் என்ன நடக்கப் போகின்றது என எங்களுக்கு மாத்திரமல்ல, என்ன செய்வதென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தெரியாமல் இருக்கும். ஆனால், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாமல் செய்வதற்கு மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்புக்குச் சென்றால் அதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினராகிய நாம் இரண்டு கைகளையும் உயர்த்தி ஆதரவளிப்போம்.” – என்றார்.

## பலாலியில் காணிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காணிகளை விடுவிக்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று யாழ். மாவட்ட செயலர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

பலாலி கிழக்கில் ஒரு தொகுதி காணியை விடுவிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார். அதன் அடிப்படையில் தற்போது சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் கடிதப் பரிமாற்றங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

விரைவில் கொழும்பில் இருந்து அதிகாரிகள் குழுவொன்று யாழ்ப்பாணம் வருகை தந்து, காணி விடுவிப்புக்கான அளவீட்டுப் பணிகள் உள்ளிட்ட இதர பணிகளை முன்னெடுக்கும்.

அதனையடுத்து காணிகள் விடுவிக்கப்பட்டு உரிமையாளர்களிடம் கையளிக்கப்படும் என்று யாழ். மாவட்ட செயலர் மேலும் கூறினார்.

## சீனாவுடனான உறவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களின் இந்தியப் பயணம் தொடர்பில் ஊடகவியலாளர்களிடம் தெளிவுபடுத்தும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“இந்தியப் பயணத்தின்போது இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகருடனான சந்திப்பில் அரசியல், பொருளாதாரம் உள்ளிட்ட காரணிகள் பற்றி பேசப்பட்டாலும் பிராந்திய பாதுகாப்பு தொடர்பிலேயே கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது. பூகோள அரசியல் போட்டியால் பிராந்தியப் பாதுகாப்புக்கு சிற்சில அச்சுறுத்தல்கள் உள்ளன. இது தொடர்பில் அவர் (இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர்) தரப்பில் கூடுதல் அவதானம் செலுத்தப்பட்டது. இதன்போது எமது நாட்டின் இறைமையைப் பாதுகாத்துக்கொண்டு, பிராந்திய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்படும் நடவடிக்கைகளுக்கு இடமளிக்கப்படமாட்டாது என நாம் கூறினோம்.

எமது நாட்டுப் பொருளாதாரம், பாதுகாப்பை நாம் முதலில் உறுதிப்படுத்த வேண்டும். எமது நாட்டுப் பாதுகாப்புக்கு பிராந்தியப் பாதுகாப்பும் மிக முக்கியம். இந்த நிலைப்பாட்டில் இருந்தே நாம் செயற்படுவோம். சீனாவுடன் கொடுக்கல் – வாங்கலில் ஈடுபட வேண்டாம் என இந்தியா எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கூறவில்லை. நாமும் அது பற்றிப் பேசவில்லை. பிராந்தியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட இடமளியோம் என்ற விடயத்தைக் கூறினோம்.” – என்றார்.







# மன்னார் தீவில் இரண்டாம் கட்ட காற்றலை அமைப்பதை எதிர்ப்பதற்கான ஆலோசனை

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் தீவில் தற்பொழுது சர்ச்சைக்கு உள்ளாகியுள்ள காற்றாலை தொடர்பாக மக்களுக்குத் தெளிவுபடுத்தி, அதற்கான தாக்கல் அறிக்கை சமர்பிக்கும் நோக்குடன் மன்னார் முக்கிய பிரதிநிகளுக்கான வழிகாட்டல் அமர்வு மன்னாரில் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை மன்னார் வாழ்வோதய கேட்போர் கூடத்தில் மன்னார் பிரஜைகள் குழுத் தலைவர் அருட்பணி எஸ்.மாக்கஸ் அடிகளார் தலைமையில் இந்த அமர்வு இடம்பெற்றது.

இதன் வளவாளராக சுற்றாடல் நீதித்துறை மையத்தின் பணிப்பாளர் ஹேமாந்த விதானகே கலந்து கொண்டார். மன்னார் பிரஜைகள் குழு ஆளுநர் சபை உறுப்பினர்கள், மீனவ சங்கத்தின் பிரதிநிதிகள் மற்றும் அரச சார்பற்ற முக்கியஸ்தர்கள், மதத் தலைவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

மன்னாரில் மக்களின் சம்மதத்தைப் பெறாது, போலி வாக்குறுதிகளைத் தெரிவித்து, மன்னார் தீவில் முதற் காற்றாலை திட்டத்தை மேற்கொண்டிருந்தனர் எனவும் –

இதனால் சுற்றாடலுக்கான பாதிப்புகளுடன் மன்னார் தீவின் மக்களின் வாழ்வாதாரம் மற்றும் இருப்பே பெரும் சவாலுக்கு உள்ளாகி வருகின்றன எனவும் கூறப்படுகின்றது. இது தொடர்பில் பலதரப்பட்ட முறைப்பாடுகளும் கண்டனப் பேரணிகள் காலத்துக்காலம் இடம்பெற்று வருகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் காற்றாலை சம்பந்தமாக ஜனாதிபதியின் நிலையான ஆற்றல் திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் இளங்கோ தலைமையில் பல திணைக்களங்களின் தலைவர்கள் கொண்ட சுமார் இருபது பேர் கொண்ட ஒரு குழுவினர் கடந்த வெள்ளிக் கிழமை மன்னாருக்கு விஜயத்தை மேற்கொண்டு மன்னார் தீவில் மேலும் காற்றாலை அமைப்பது தொடர்பாக மன்னார் மாவட்ட செயலகத்தில் பொது அமைப்பு பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தனர்.

இங்கும் மன்னார் தீவில் காற்றாலை அமைப்பதற்கான எதிர்ப்புக்கள் பலமாக தெரிவிக்கப்பட்டன.

அத்துடன் மன்னார் நகர் பிரதேச செயலகப் பிரிவில் இரண்டாம் கட்டமாக 52 காற்றாலை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள 250 மெகாவற் காற்றாலை சக்தி திட்டத்தின் சுற்றாடல் தாக்க மதிப்பிட்டறிக்கையை முப்பது நாள்களுக்குள் எழுத்து மூலம் தெரிவிக்கும்படி மன்னார் மக்களுக்கு தற்பொழுது வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ள நிலையில் இன்னும் இரண்டு வாரங்களே காணப்படுவதால் இதற்கான தாக்க அறிக்கை அனுப்புவதற்கான ஆலோசனைக் கூட்டமாக இது அமைந்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.








# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரணிலின் தந்திரத் திட்டம்

அரசியலில் கிழட்டு நரித் தந்திரசாலியான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஒவ்வொரு நகர்விலும் சூட்சுமமான - மிக நுட்பமான - சாணக்கியமும் தந்திரமும் பொதிந்திருப்பது நமது அனுபவப் பாடமாகும்.

கடந்த ஆண்டில் உரிய காலத்தில் உள்ளூராட்சித் தேர்தலுக்கான அறிவிப்பை தேர்தல் ஆணையம் வெளியிட்ட போது அது குறித்து ஒன்றும் சொல்லாமல் பம்மிக் கொண்டிருந்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

வேட்பு மனுக்கள் கோரப்பட்டு, ஏற்கப்பட்டு,பிரசாரங்களும்முழுவீச்சில்ஆரம்பமாகி, வாக்குச்சீட்டுகளிலும் ஒரு பகுதி அச்சிடப்பட்ட சமயத்தில்தான் தமது தந்திரக் கைவரிசையைக் காட்டினார் அவர்.

ஜனாதிபதிப் பதவியுடன் நிதி அமைச்சர் பதவியையும் தமது கைவசமே வைத்திருக்கும் ரணில் விக்கிரமசிங்க, உள்ளூராட்சித் தேர்தல் நடத்துவதற்கான நிதியை வழங்காமல் தடுத்ததன் மூலம் அத்தேர்தலுக்குச் சத்தம் சந்தடியின்றி ஆப்படித்தார்.

அது போன்ற சூட்சுமமான ஒரு போக்கு இப்போதும் அவர் தரப்பிலிருந்து கட்டவிழ்கின்றமையை நாம் கவனிக்க வேண்டும்.

அரசமைப்புச் சட்ட ஏற்பாடுகளின்படி அடுத்த ஏழு முதல் எட்டு மாதங்களில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற வேண்டும். அதை நடத்துவது தொடர்பான அதிகாரம் ஏதும் தற்போது பதவியில் இருக்கும் ஜனாதிபதியான ரணிலுக்குக் கிடையவே கிடையாது. அந்த விடயம் சுயாதீன தேர்தல் ஆணையகத்துக்கு உரியது.

அந்தத் தேர்தல் திட்டமிட்டவாறு நடைபெறுமா அல்லது உள்ளூராட்சித் தேர்தலுக்கு நடந்ததை போல இதற்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமது அதிகாரத்தைப் பிரயோகித்துத் தடை போடுவாரா என்ற சந்தேகம் வலுத்து வருகின்றது.

அந்தத் தேர்தலை நடத்த விடாமல் தாமே இடைஞ்சல் பண்ணுகின்றார் என்ற கருத்து நிலைப்பாடு மக்கள் மனதில் ஏற்பட்டால் அது தனக்கு எதிரான மக்கள் உணர்வெழுச்சியைத் தட்டி எழுப்பி விடும் என்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நன்கு தெரியும்.

அந்த நிலைமை ஏற்படாமல் சமாளிப்பதற்காக, திட்டமிட்டபடி ஜனாதிபதித் தேர்தல் குறித்ததிகதியில்-செப்டம்பர்அல்லதுஒக்டோபரில் - நடைபெறும் என்று அண்மைக்காலமாக பொது நிகழ்வு ஒவ்வொன்றிலும் கலந்து கொள்ளும் போதும் அறிவித்து வருகின்றார் அவர்.

ஆனாலும் அந்த ஜனாதிபதி தேர்தலில் தாம் போட்டியிடுவார் என்று அறிவிப்பை அவர் விடுக்கின்றார் இல்லை. இன்னும் ஏழு மாதத்தில் நடக்கவிருக்கும் - அரசுத் தலைவரை தேர்வு செய்யும் - ஜனாதிபதித் தேர்தலில் தாம் பங்குபற்றுவாரா, இல்லையா என்பதைத் தெளிவாகத் தெரிவிக்காமல் கண்ணாமூச்சி விளையாட்டுக் காட்டி வருகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அண்மையில் அவர் ஆஸ்திரேலியாவுக்குச் சென்று இருந்த போது இந்த விடயத்தைக் குறிப்பிட்டு கேட்கப்பட்ட போதும், அதற்கு நேரடியாக பதில் தராமல் ஒளித்துப் பிடித்து விடைகொடுத்தார் ரணில்.

தேர்தலுக்கு இன்னும் ஏழு, எட்டு மாதங்களே இருக்கும் சூழலில், இப்படி அவர் பண்ணுவது பலத்த சந்தேகங்களை எழுப்பியுள்ளது. இந்தக் கண்ணாமூச்சி விளையாட்டுக்குப் பின்னால் புதைந்திருக்கக் கூடிய சூட்சுமம் குறித்து புதிய கதைகள் இப்போது கட்டவிழத் தொடங்கியுள்ளன.

அவர் ஜனாதிபதி தேர்தலை நடத்தப் போவதில்லை, நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கப் போகின்றேன் என்ற பாசாங்கில் - அந்த நடவடிக்கையை ஒப்பேற்றும் பெயரில் - மேலும் ஓராண்டு காலம் பதவியில் நீடித்து விட்டு, விலகும் எத்தனத்தில் அவர் ஈடுபடக் கூடும் என அவருக்கு நெருக்கமான சில வட்டாரங்கள் கூறுகின்றன.

இப்படிப் பதவியில் நீடிக்கும் அவரது முயற்சிக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆகியன கடுமையான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி, அரசியல் எதிர்ப்பைக் காத்திரமாக முன்னெடுக்கலாம் என்று எதிர்பார்க்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதனைச் சமாளித்து முறியடிப்பதற்கும் ஒரு மாற்று வழி வைத்திருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பது தொடர்பாக தமது தற்போதைய பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னரே மக்கள் மத்தியில் ஒரு சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி, அதன் மூலம் அந்த முயற்சிக்கு மக்கள் ஆதரவை பெற்று, அதைக் காட்டி எதிரணியின் வாயை அடக்குவது குறித்த ஒரு திட்டத்தையும் ரணில் தரப்பு ஆதரித்து, ஆலோசித்து வருவதாக இப்போது தகவல்கள் கசிந்துள்ளன.

அரசியல் நரித் தந்திரசாலியான ரணில் இப்பத்தியில் நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி தான் பதவியில் தொடர்வதற்கு எதுவும் செய்வார், எப்படியும் செய்வார்...!

# ஆளுநர் ஆர்.என். ரவிக்குக் எதிராக தீர்மானம் கொண்டுவந்த தமிழக அரசு



2024 ஆம் ஆண்டின் முதல் தமிழக சட்டப்பேரவைக் கூட்டத் தொடர் நேற்று கூடியது. இதில், தமிழக அரசின் சட்டப் பேரவை உரையை ஆளுநர் ஆர்.என்.ரவி புறக்கணித்தி ருப்பதும், அதற்கு எதிராக தமிழக அரசு தீர்மானம் கொண்டு வந்ததும் சலசலப்பை ஏற்படுத்தியது.

இந்த ஆண்டு சட்டப்பேரவையில் தன் உரையைத் தொடங்கினார் ஆளுநர். அப்போது, தேசிய கீதம் இசைக் கப்படவில்லை. மேலும், உரையில் உண்மைத்தன்மை மற்றும் தார்மிக கருத்துகளில் முரண்பாடு இருப்பதாகக் கூறி, தமிழக அரசின் உரையைப் புறக்கணித்தார் ஆளுநர் ஆர்.என்.ரவி.

இப்படியாக, வெறும் 3 நிமிடங்களில் ஆளுநர் ஆர்.என். ரவி தன் உரையை முடித்துக்கொண்டார். இதனால், அவை யில் கூச்சல், குழப்பம் ஏற்பட்டது. அதன்பின் சபாநாயகர் அப்பாவு தமிழில் உரையைப் படித்தார்

கடந்த முறை தமிழக அரசு வழங்கிய உரையில் சிலவற்றை நீக்கியும் சேர்த்தும் வாசித்திருந்தார் ஆளுநர். இதனால், அவர் உரையை நீக்க தீர்மானம் கொண்டு வந்தது தி.மு.க. அரசு. எனவே, ஆளுநர் அதற்கு எதிர்ப்புப் தெரிவித்து அவையை விட்டு வெளியேறினார். இந்த நிலையில், இந்த ஆண்டு ஆளுநர் தமிழக உரையைப் புறக்கணித்துள்ளார்.

அதன்பின், அவைமுன்னவர் துரைமுருகன் தீர்மா னத்தை வாசிக்கத் தொடங்கியதும் ஆளுநர் அவையிலி ருந்து வெளியேறினார். அந்தத் தீர்மானத்தில், 'ஆளுநர் ஒப்புதல் வழங்கிய உரை மட்டுமே அவைக் குறிப்பில் ஏற்றப் படும். ஆளுநர் அவையில் பேசியது அவைக்குறிப்பில் நீக் கப்படும்" என சொல்லப்பட்டிருந்தது. அந்தத் தீர்மானம் அவையில் நிறைவேற்றப்பட்டது.

# 'ஆளுநர் உரையில் தமிழக அரசின் பொய்கள்': பட்டியலிடுகின்றார் பா.ஜ.கவின் அண்ணாமலை

"சரக்கு மற்றும் சேவை வரியால் ஒரே ஆண்டில் 20 ஆயி ரம் கோடி ரூபாய் வருவாய் இழப்பு எவ்வாறு ஏற்பட்டுள்ளது என்பதை தி.மு.க. அரசு, தமிழக மக்களுக்கு தெளிவுப்படுத்த வேண்டும். இல்லையெனில், ஆளுநர் உரையில் இதுபோன்ற பொய்களை சேர்த்ததற்கு மன்னிப்பு கேட்க வேண்டும்."

– இவ்வாறு பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"தி.மு.க. ஆட்சிக்கு வந்தபின், தாங்கள் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபோது சட்டப்பேரவையில் இல்லாமல் வெளிநடப்பு செய்வதையே வாடிக்கையாகக் கொண்டு, பத்திரிகையாளர்களை சந்தித்து ஆளுநர் உரையை ஏன் புறக்கணித்தார்கள் என்று காரணம் சொன்னதை எல்லாம் தற்போது மறந்துவிட்டார்கள் போல் தெரிகிறது. ஆளுநர் உரையை புறக்கணிக்க அவர்கள் சொன்ன காரணங்களை உங்களுக்கு முதலில் நினைவூட்டிவிட்டு இந்த ஆண்டு ஆளுநர் உரையில் மிகுதியாக அடுக்கப்பட்ட பொய்களை மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டும் கடமை தமிழக பா.ஜ.கவுக்கு உள்ளது.

மகளிர் உரிமைத் திட்டத்தை செயல்படுத்தி தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டோம் என்று ஆளுநர் உரையில் கூறப்பட்டுள்ளது. ஆனால் உண்மை நிலவரம், அனைத்து மகளிருக்கும் உரிமைத் தொகை என்று தேர்தல் வாக்குறுதி வழங்கிவிட்டு, சுமார் 1.2 கோடி குடும்ப அட்டை வைத்திருக்கும் மகளிருக்கு உரிமைத் தொகை வழங்கா மல் ஏமாற்றியதால் என்ன பெருமை உள்ளது? இப்படி



கொடுத்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றாமல் கட்சி மேடைகளில் மட்டும் 99 சதவீத தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டோம் என்று கூசாமல் பொய் சொல்லும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அதை ஆளுநர் உரையில் சேர்க்கா மல் விட்டது உள்ளபடியே மகிழ்ச்சி.

மேலும், பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்கும் கடன்கள் மீதும் தி.மு.க. ஆளுநர் உரையில் ஸ்டிக்கர் ஒட்டியுள்ளது. விவசாயிகளின் நலன் காக்க பல முன்னோடித் திட்டங்களை இந்த அரசு நடைமுறைப்படுத்தியதாக தெரிவிக்கப்பட்டபோது, திருவண்ணாமலை விவசாயிகள் மீது போடப்பட்ட குண்டாஸ் வழக்கும், தமிழக அரசின் முயற்சியால் 2023 ஆம் ஆண்டு இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 243 மீன வர்களில் 242 பேர் விடுவிக்கப்பட்டனர் என சொன்னபோது, மத்தியில் தி.மு.க. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் 80 இற்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் கொல்லப்பட்டனர் என்பது நினைவுக்கு வந்தது." – என்று குறிப்பிட்டுள்ளார்.

# பா.ஜ.கவுடன் கூட்டணி இல்லை: உறுதியாக சொன்னார் இ.பி.எஸ்.

"தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அ.தி.மு.க. இல்லை. இறுதியாகவும், உறுதியாகவும் சொல்கிறோம் பா.ஜ.கவுடன் அ.தி.மு.க. கூட்டணி இல்லை."

– இவ்வாறு அ.தி.மு.,.க பொதுச்செயலாளர் பழனிசாமி திட்டவட்டமாக தெரிவித்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூரில் ஒன்றிய தி.மு.க. முன்னாள் செயலாளர் கோவிந்தராசன், பர்கூர் ஒன்றியக் குழு தலைவர் கவிதா கோவிந்தராசன் உள்ளிட்ட 10 ஆயிரத் துக்கும் மேற்பட்டோர் அ.தி.மு.கவில் இணைந்தனர்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு பழனிசாமி கருத்து தெரிவிக்கையில்,

மறைந்த முதல்வர் ஜெயலலிதா, கிருஷ்ணகிரியை தனி மாவட்டமாக உருவாக்கினார். இங்கு அ.தி.மு.க. ஆட்சி யில் எண்ணற்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அ.தி.மு.க. ஆட்சியில் மின் கட்டணம் உயர்த்தப்படவில்லை. தற்போதைய தி.மு.க. அரசு மின்கட்டணத்தை 52 சதவீதம் உயர்த்தி உள்ளது. வீடு, கடை சொத்துவரி, குடிநீர் வரிகள் உயர்த்தியுள்ளனர். குப்பைக்கு கூட வரி போடுகிறார்கள். திமுக ஆட்சியில் விலைவாசி கடுமையாக உயர்ந்துள்ளது. ஏழை, எளிய மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மத்திய, மாநில அரசுகள் மக்களைப் பற்றி கவலைப்படவில்லை.

பா.ஜ.கவுடன் மறைமுகமாக அ.தி.மு.க. உறவு வைத் துள்ளதாக கூறி வருகிறார்கள். நாங்கள் ஏற்கெனவே பா.ஜ.கவுடன் கூட்டணியில் இல்லை என அறிவித்துவிட்டோம். தேசிய ஜனநாயகக் கூட்டணியிலும் அ.தி.மு.க. இல்லை.

இறுதியாகவும், உறுதியாகவும் சொல்கிறோம் அ.தி.மு.க, பா.ஜ.கவுடன் கூட்டணியில் இல்லை, இல்லை. இது குறித்து இனி கேள்வி எழுப்ப வேண்டாம். தி.மு.க. கூட்டணி பேச்சு வார்த்தையில் இழுபறி உள்ளது. 10 நாள்களில் யாரெல்லாம் தி.மு.க. கூட்டணியில் தொடர இருக்கிறார்கள் என தெரிய வரும். தி.மு.க. கூட்டணியை நம்பி உள்ளது. நாங்கள் மக்களை நம்பியுள்ளோம்." – என்றார்.




# பாகிஸ்தானில் புதிய கூட்டணி ஆட்சி: நாவாஸ் - பூட்டோ கட்சிகள் இணைவு

பாகிஸ்தானில் நாவாஸ் ஷெரீப்பின் கட்சியும் பிலாவல் பூட்டோ கட்சியும் இணைந்து கூட்டணி ஆட்சி அமைக்கத் தீர்மானித்துள்ளன என தகவல் வெளியாகியுள்ளது.

அண்மையில் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் இம்ரான் கான் கட்சி 93 இடங்களிலும், நவாஸ் ஷெரீப் கட்சி 75 இடங்களிலும், பிலாவல் பூட்டோ கட்சி 54 இடங்களிலும் வெற்றி பெற்றதோடு ஏனைய கட்சிகள் 42 இடங்களை பிடித்துள்ளன.

இந்நிலையில் மொத்தமாக உள்ள 264 இடங்களில் ஆட்சியைப் பிடிக்க 133 இடங்கள் தேவை என்பதால் நவாஸ் ஷெரீப்பின் கட்சி பிலாவல் பூட்டோ கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைக்க முடிவு செய்துள்ளனர்.

இதேவேளை மேலும் 5 உறுப்பினர்களின் ஆதரவு தேவை என்பதால் சுயேட்சை வேட்பாளர்களையே அல்லது சிறிய கட்சிகளையோ அவர்கள் இணைத்துக் கொள்வார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்

அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் லொயிட் ஆஸ்டின் திடீர் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், 70 வயதான லாயிட் ஆஸ்டின் தேசிய இராணுவ மருத்துவ மையத்தில் தங்கி சிகிச்சை பெறுவார் என அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

லொயிட் ஆஸ்டின் இதற்கு முன்னர், 'தனக்கு புற்று நோய் இருந்ததையும், அதற்காக சிகிச்சை பெற்று வந் ததையும், வெளிப்படுத்தத் தவறியிருந்தார் என்பதற் காக கடந்த டிசெம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார் என்பதும் குறிப் பிடத்தக்கது.



# இஸ்ரேல் பிரதமருக்கு உயிர் அச்சுறுத்தல்: ஈரான் வெளிவிவகார அமைச்சர் விடுத்தார்

லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாஹூவின் கதை முடிந்துவிடும் என ஈரானிய வெளிவிவகார அமைச்சர் ஹொஸைன் அமீர் அப்துல்லாஹியன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

காஸா மீது இஸ்ரேல் இராணுவம் நடத்தி வரும் தாக்குதலானது அதன் அண்டை நாடுகளுக்கும் பரவலாம் என்ற பதற்றமும், அச்சமும் காணப்படும் நிலையிலேயே ஈரானிய வெளிவிவகார அமைச்சர் இந்த கருத்தினை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, லெபானின் மீது பாரிய தாக்குதல்களை நடத்த இஸ்ரேல் ஏதேனும் நடவடிக்கை எடுத்தால், அது இஸ்ரேல் பிரதமர் நெத்தன்யாஹூவின் இறுதி முடிவாக இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# விசா நடைமுறைகளை எளிதாக்க வேண்டும்: ஐரோப்பிய ஒன்றியம் கோரிக்கை வலியுறுத்தல்

விஞ்ஞானிகளுக்கான விசா நடைமுறைகள் மற்றும் செலவுகளை எளிதாக்க வேண்டும் என பிரித்தானியாவுக்கு ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், குறித்த நடவடிக்கையை பிரித்தானியா மேற்கொள்ளவிட்டால், ஐரோப்பிய ஒரிசோன் ஆராய்ச்சி திட்டத்தின் முழுப் பலன்களையும் இழக்க நேரிடும் என அந்த ஒன்றியம் எச்சரித்துள்ளது.

லண்டனுக்கான தனது உத்தியோகப்பூர்வ பணயத்தின் போது, ஐரோப்பிய ஒன்றிய ஆராய்ச்சி ஆணையர் இலியானா இவனோவா இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சுக்களை முன்னெடுக்கவுள்ளார்.

ஐரோப்பிய ஆராய்ச்சியாளர்கள் பிரித்தானியாவுக்கான பயணத்தை மேற்கொள்வதில் பல நெருக்கடிகளை எதிர் நோக்குகின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த சிரமங்களைத் தீர்க்க இரு தரப்பினரும் தங்களால் முடிந்ததை செய்வதாக இலியானா இவனோவா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் பிரித்தானிய பயணத்தின் போதான குறைகளை நிவர்த்தி செய்வது தமது இலக்கு எனவும் அவர் கூறியுள்ளார்.



# இலங்கை – இந்தியாவுக்கு இடையில் யு.பி.ஐ. கொடுக்கல் வாங்கல் ஆரம்பம்

## ஜனாதிபதி ரணில், இந்தியப் பிரதமர் மோடி பங்கேற்பு









இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையிலான ஒருங்கிணைந்த பரிவர்த்தனை தரவு எனப்படும் யு.பி.ஐ. கொடுக்கல் – வாங்கல் முறைமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த கொடுக்கல் – வாங்கல் முறைமையினூடாக திறன்பேசி உள்ளிட்ட தொழில்நுட்ப உபகரணங்களின் ஊடாக விரைவாக பணப்பரிமாற்றம் மேற்கொள்ளும் வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் 2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கொடுக்கல் – வாங்கல் முறைமையானது, தற்போது அந்த நாட்டில் பாரிய அளவில் பயன்படுத்தப்படும் முறைமையாகக் காணப்படுகிறது.

இந்த நிலையில், இலங்கை வரும் இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு கியூ.ஆர். குறியீடு ஊடாக ஒருங்கிணைந்த கட்டண முறை எனப்படும் யு.பி.ஐ.ஊடாகப்பணம்செலுத்தும்முறைமையை அறிமுகப்படுத்தும் நிகழ்வு நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் ஒன்லைன் தொழில்நுட்பம் மூலம் இதில் இணைந்து கொண்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது அண்மைய உத்தியோகபூர்வ இந்திய விஜயத்தின் போது வெளியிட்ட “தொலைநோக்கு அறிக்கை”யின் பிரகாரம் இரு நாடுகளுக்கும் இடையில் தற்போதுள்ள இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் ஒன்றிணைந்த கொடுப்பனவு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

இலங்கையில் உள்ள சுமார் 20 உள்ளூர் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் இதற்கு தங்கள் ஆதரவை வழங்க ஒப்புக்கொண்டுள்ளன. மேலும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் பகுதிகளுக்கு இந்த சேவையை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த வேலைத் திட்டத்தின் மூலம் இந்தியாவின் தமிழ் நாடு மற்றும் மும்பையுடன் இலங்கை இணைக்கப்படும் எனவும் இதன் மூலம் இலங்கையில் உள்ள சுமார் 4 லட்சம் வர்த்தகர்கள் பயனடைவார்கள் எனவும் தெரிவித்தார்.

இலங்கையில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு மட்டுமன்றி இந்திய – இலங்கை பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவதற்கும் இது ஒரு தனித்துவமான சந்தர்ப்பம் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அண்மையில் இந்தியாவிற்கான உத்தியோகபூர்வ விஜயத்தின் போது பிரதமர் நரேந்திர மோடியுடன் தாம் வெளியிட்ட ‘தொலைநோக்கு அறிக்கையை’ தொடர்ந்து முன்னெடுப்பதற்கு நான் அர்ப்பணிப்புடன் இருக்கிறேன் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, “இலங்கை மற்றும் மொரிஷியஸை யு.பி.ஐ. கட்டமைப்புடன் ஒருங்கிணைக்கும் இலக்கை அடைவது பரஸ்பர நன்மைகளைப் பெறுவதற்கும் உள்ளூர் பொருளாதாரங்களின் டிஜிட்டல் மாற்றத்தை விரைவுபடுத்துவதற்கும் ஒரு படியாகும்”– என்றார்.

இந்தத் திட்டத்தை ஆரம்பிப்பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் மொரிஷியஸ் பிரதமர் பிரவிந்த் ஜக்நாத் ஆகியோர் ஆற்றிய பங்களிப்பிற்கு நன்றி தெரிவித்த பிரதமர் மோடி, இந்தத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த மூன்று நாடுகளின் மத்திய வங்கிகள் மற்றும் நிறுவனங்களின் பங்களிப்பையும் பாராட்டினார்.








# டிஜிட்டல் கட்டண முறைமை மூலம் வர்த்தகர்களுக்கு பல்வேறு நன்மைகள்



டிஜிட்டல் கட்டண முறை மூலம் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களுக்கு பல்வேறு நன்மைகள் கிட்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு வருகை தரும் இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு டிஜிட்டல் கியூ.ஆர். குறியீடு மூலம் ஒருங்கிணைந்த கட்டண முறை அல்லது யு.பி.ஐ. அறிமுகப்படுத்திய பின்னர் அது தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று பிற்பகல் ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்றது.

NPCI International Payments Limited மற்றும் இலங்கையின் டியமெய்யல பிரைவேட் லிமிடெட் இணைந்து செயல்படுத்தும் இந்த திட்டத்தை விரைவாக விரிவுபடுத்தும் நோக்கத்துடன், 10 ஆயிரம் வர்த்தக நிலையங்களில் இந்தக் கட்டண முறை இதனுடன் இணைந்ததாக நடைமுறைப் படுத்தப்படுவதோடு இந்த வசதியை மேலும் விரிவுபடுத்துவதன் மூலம், 2024 மார்ச் மாத்திற்குள், இந்த வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கை 65 ஆயிரமாக உயர்த்தப்படும் எனவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

பெரும்பாலான இந்தியர்கள் கியூ.ஆர். குறியீடு ஊடாக கொடுப்பனவுகளை செலுத்துவதற்குப் பழக்கப்பட்டிருப்பதால், இந்திய சுற்றுலாப் பயணிகள், இலங்கை முழுவதும் உள்ள வர்த்தக சமூகத்திற்கு பணம் செலுத்துவதற்கு யு.பி.ஐ. தொலைபேசி செயலிகளை தடையின்றிப் பயன்படுத்தலாம்.

ஏற்கனவே உள்ளூர் பரிவர்த்தனைகளுக்கு மிகவும் உகந்த முறைமையான, LankaQR ஊடாக கியூ.ஆர். குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் கொடுப்பனவுகளை செலுத்த முடியும்.

இதன் மூலம் செலுத்தப்படும் பணம் இலங்கை ரூபாவில் உரிய வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு உடனடியாக குறுஞ்செய்தி மூலம் அறிவிக்கப்படும். இவ்வாறான வருமானத்தை அவர்களது வங்கிக் கணக்குகளில் வரவு வைப்பதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களுக்கு 06 மாதங்களில் குறுகிய காலத்தில் வங்கிக் கடன்களை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் வழங்கப்படும்.

இரண்டாவது கட்டத்தில், இந்த கட்டமைப்பை மேலும் விரிவுபடுத்துவதுடன், இந்தியாவில் கியூ.ஆர். குறியீடு மூலம் பணம் செலுத்தும் வசதியை இலங்கையர்களுக்கு வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.



# துப்பாக்கிச்சூட்டில் இளம்பெண் காயம்

மீகொட பொருளாதார மத்திய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இளம்பெண்ணொருவர் காயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளொன்றில் வந்த ஒருவரே துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீகொட பகுதியைச் சேர்ந்த 23 வயதான பெண்ணே துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்துள்ளார்.

காயமடைந்த பெண் ஹோமாகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப ஜனாதிபதியின் வேலைத் திட்டத்தைத் தவிர மாற்று முறை இல்லை

## அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு

“இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்னெடுக்கப்படும் பொருளாதார வேலைத் திட்டத்தைத் தவிர்த்து வேறு மாற்று வழிகள் இருப்பின் எந்தவொரு குழுவுடனும் பேச்சுவார்த்தைக்குத் தயார்.”

– இவ்வாறு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில்நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“2023 ஆம் ஆண்டு வரி விதிப்பின் மூலம் பெறப்பட்ட அரச வருமானம் 3201 பில்லியன் ரூபாவாகும். நிவாரணங்கள், சம்பளம் மற்றும் அரச கடன்கள் ஆகியவற்றிற்காக திறைசேரியிலிருந்து செலவிடப்பட்ட தொகை 4394 பில்லியன் ரூபாவாகும். அரச செலவில் எப்பகுதி குறைக்கப்படும் என்பதை மாற்றுக் கருத்துள்ள குழுக்கள் மக்களுக்கு அறிவிக்க வேண்டும்.

இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வுகள் இல்லை என ஜனாதிபதி தனது சிம்மாசன உரையில் குறிப்பிட்டார். 2022 இல் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி பற்றி மக்களுக்குத் தெரியும்.

அதிலிருந்து நாட்டை மீட்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்னெடுக்கப்பட்ட வேலைத் திட்டத்தினால் இலங்கையின் பொருளாதாரம் இன்று சாதகமான நிலையை எட்டியுள்ளது.

கடந்த ஆண்டு தொடர்பில் குறிப்பிடுவதாயின், வரிப் பணம் உட்பட மொத்த அரச வருமானம் 3201 பில்லியன் ரூபாவாகும். அதற்காக உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் 1550 பில்லியன் ரூபாவும், இலங்கை சுங்கத்தினால் 923 பில்லியன் ரூபாவும், மதுவரித் திணைக்களத்தினால் 169 பில்லியன் ரூபாவும், மோட்டார் வாகனத் திணைக்களத்தினால் 20 பில்லியன் ரூபாவும் பங்களிப்புச் செய்யப்பட்டுள்ளன. இந்தத் தொகை திறைசேரிக்குக் கிடைத்த வருமானம் ஆகும். ஆனால் கடந்த வருடம் திறைசேரியால் செலவிடப்பட்ட பணத்தின் அளவு 4394 பில்லியன் ரூபாவாகும்.

நிவாரணங்கள், அரச கடன்கள், அரச ஊழியர்களுக்கான சம்பளம் என்பன இதில் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், திறைசேரியில் இருந்து 13,292 பில்லியன் ரூபா உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காகச் செலவிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக எரிபொருள் வழங்கப்படுகிறது. எரிவாயு வரிசைகள் இல்லை. தடையற்ற மின் விநியோகம் இருக்கிறது. அரச ஊழியர்களுக்கு குறித்த திகதியில் சம்பளம் வழங்கப்படுகிறது. இந்த செயற்பாடுகள் மூலம் ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்படும் பொருளாதார வேலைத்திட்டத்திற்கு மாற்றாக வேறுவழி எதுவும் இல்லை என்பது நிரூபணமாகியுள்ளது.

அதிகாரத்தைப்பெறுவதற்காகமேடைகளில் சில குழுக்கள் பல்வேறு பொய்யான அறிக்கைகளை வெளியிட்டாலும், பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்கு என்ன வேலைத் திட்டத்தை மேற்கொள்வோம் என்பதை அந்தக் குழுக்கள் மக்களுக்குக் கூற சொல்ல வேண்டும். நிவாரணப் பகுதியை குறைக்கிறார்களா? இல்லை என்றால் அரச கடன் பகுதியை குறைக்கிறார்களா? அல்லது அரச உழியர்களின் சம்பளத்தில் கைவைக்கிறார்களா? என்பதை மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

மக்கள் விடுதலை முன்னணி போன்ற குழுக்களுக்கு அரச நிதி முகாமைத்துவம் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை பற்றிய அறிவு பலவீனமாகவே உள்ளது. மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த சிலர் ஆட்சியில் பங்கேற்ற காலம் மிகக் குறைவு. அப்போது, தாங்கள் வெற்றி பெற்ற திஸ்ஸமஹாராம பிரதேச சபையை உரிய முறையில் நிர்வகிக்க முடியாததால் மீண்டும் அடுத்த அரசியல் குழுவுக்கு அதிகாரத்தை வழங்க மக்கள் தீர்மானித்தனர்.

2003 ஆம் ஆண்டு, பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க, இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதைத் தடுப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பான சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அந்த சட்டமூலத்தில் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையை உள்நாட்டு உற்பத்தியில் 5 வீதமாக வைத்திருப்பது மற்றும் அரச கடனை 60 வீதமாக பேணுவது போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. ஆனால், பின்னர் வந்த அரசாங்கங்களால் அதைச் செயல்படுத்த முடியவில்லை.

இதனால், 2022 ஆம் ஆண்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொருளாதார நெருக்கடிக்கு முற்றுப்புள்ளி வைத்து நாட்டை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தார்.”

– என்றார்.



# மரக்கறி விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது

யாழ்ப்பாணத்தில் அறுவடை செய்யப்பட்ட மரக்கறிகள் தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்துக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளன.

இந்த நிலையில், உயர்வடைந்து வந்த மரக்கறி வகைகளின் விலை 65 முதல் 70 வீதம் வரை குறைந்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணம் – சுன்னாகம் பகுதியில் விளைவிக்கப்பட்ட கரட், கறிமிளகாய், உருளைகிழங்கு போன்ற மரக்கறிகள் இவ்வாறு அதிகளவில் தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்துக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளன.

அதற்கமைய, மொத்த விலையில் 1,000 முதல் 2,000 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ கரட் நேற்று 500 முதல் 600 ரூபா வரை குறைந்திருந்தது.



# சனத் நிஷாந்த மரணம் குறித்து சி.ஐ.டி. விசாரணை ஆரம்பம்

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த மற்றும் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆகியோரின் மரணம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் மனித கடத்தல் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பான விசாரணைப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

அதன்படி, இந்த விபத்து இடம்பெற்ற போது, அந்த வாகனத்திற்கு முன்னால் பயணித்த கொள்கலன் வாகனத்தின் சாரதி நாரஹேன்பிட்டியிலுள்ள இந்த விசாரணைப் பிரிவுக்குச் சென்று 5 மணித்தியாலங்கள் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.





முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த மற்றும் அவரது பாதுகாப்பு அதிகாரிக்கு மரணத்தை ஏற்படுத்திய விபத்து குறித்து சந்தேகம் உள்ளதாகவும் அது தொடர்பான முறையான விசாரணை நடத்த வேண்டுமெனவும் சனத் நிஷாந்தவின் மனைவியான சட்டத்தரணி சாமரி பிரியங்கா குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்திருந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சுகாதாரத் தரப்புகள் இன்று காலை முதல் திரும்பவும் தொழிற்சங்க நடவடிக்கைகள்

72 சுகாதார தொழிற்சங்கங்கள் இன்று காலை 6 மணிமுதல் மீண்டும் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதற்கு தீர்மானித்துள்ளன என சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

வைத்தியர்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள 35 ஆயிரம் ரூபாய் மேலதிக கொடுப்பனவு, தமக்கும் வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தி 72 சுகாதார தொழிற்சங்கங்கள் பல தடவைகளில் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தன.

இந்த விடயம் தொடர்பில் நிதியமைச்சின் அதிகாரிகளுக்கும், சுகாதார தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

இந்த பேச்சுவார்த்தை தோல்வியடைந்த நிலையில் தொடர் பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத் தொழிற்சங்கங்களினது கூட்டமைப்பின் இணைப்பாளர் சானக்க தர்மவிக்ரம குறிப்பிட்டுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 13.02.2024

## மேஷம்

உங்கள் மனதில் உணர்ச்சி பூர்வமான எண்ணங்கள் ஓடும். உங்களிடம் காணப்படும் பதற்றம் உங்கள் பேச்சில் வெளிப்படும். பிரார்த்தனை மற்றும் வழிபாடு மேற்கொள்வதன் மூலம் உங்கள் பதற்றத்தைக் குறைக்கலாம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படும். கூடுதல் பணிகள் உங்களுக்கு சுமையாக தெரியும். உங்களை நிரூபிக்க நீங்கள் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். உறவில் மகிழ்ச்சியும் அமைதியும் ஏற்பட நட்பான அணுகுமுறை மற்றும் மனம் திறந்த பேச்சு அவசியம்.

அதிக பொறுப்புகள் காரணமாக தேவையற்ற செலவுகள் ஏற்படும். இது உங்களுக்குக் கவலையை ஏற்படுத்தும்.

மூட்டுக்கள் மற்றும் தோள்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. இன்று சிறிது பதற்றமாக இருப்பீர்கள்.

## ரிஷபம்

இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்கும். முக்கிய முடிவுகள் எடுக்க இந்த நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். இன்று அமைதியும் திருப்தியும் காணப்படும்.

உங்கள் திறமையை உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது உங்கள் தனித் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் தரமான நேரத்தை செலவு செய்வீர்கள். உங்கள் துணையை உங்கள் நண்பர் வீட்டுக்கு அழைத்துச் செல்வீர்கள். இது உங்கள் இருவருக்கும் மகிழ்ச்சியை அளிக்கும்.

பண வரவு அதிகமாக இருக்கும். நீங்கள் அதிக பணம் சேமிக்கும் நிலையில் இருப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் முழுமையாக இருக்கும்.

## மிதுனம்

இன்று நற்பலன்கள் காண்பதற்கு சாதகமான நாள். கடினமான சூழ்நிலையையும் எளிதாக மேற்கொள்வீர்கள். உங்களின் தன்னம்பிக்கை மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடத்தில் உங்கள் பணிகளை சிறப்பாக மேற்கொள்வீர்கள். நீங்கள் உங்கள் பணிகளை ஒழுங்கு முறையுடன் மேற்கொள்வீர்கள். நீங்கள் எளிதில் உயர்நிலை அடைவீர்கள்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே அன்பு காணப்படும். இருவரும் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வீர்கள். இனிமையான தருணங்களை ஒன்றாகப் பகிர்ந்து கொள்வீர்கள்.

நீங்கள் பங்கு வர்த்தகத்தில் முதலீடு செய்யலாம். நீங்கள் இன்று லாபம் அடையும் நாள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## கடகம்

உங்கள் இலக்குகளை அடைவதில் வெற்றி காண மாட்டீர்கள். புதிய விஷயங்களைக் கற்று வெற்றி பெற வேண்டும் என்ற ஆர்வம் இருந்தாலும் உங்கள் முயற்சிகள் வீணாகும். பொறுமையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

பணியிடத்தில் இனிமையான சூழ்நிலை இருக்காது. நிலுவைப் பணிகள் உங்களுக்கு கவலை அளிக்கும். பணியில் மந்த நிலை காணப்படும்.

நீங்கள் உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் கருத்து வேறுபாடு எழும்.

நிதி வளர்ச்சிக்கு இது சாதகமான நாள் அல்ல. உங்கள் குழந்தைகளின் நலனுக்காக செலவு செய்ய நேரலாம்.

மன உளைச்சல் காரணமாக இன்று அமைதியின்மை காணப்படும். இது உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.

## சிம்மம்

இன்றைய செயல்கள் உங்களுக்கு சாதகமாக இருக்காது. உங்கள் அன்றாட செயல்களில் கவனம் தேவை. பாதகமான விளைவுகள் ஏற்படாமல் இருக்க உரையாடுவதற்கு முன் யோசித்து செயல்பட வேண்டும். பிரார்த்தனை மற்றும் வழிபாடு ஆறுதல் அளிக்கும்.

சக பணியாளர்களை கையாள்வது கடினமாக உணர்வீர்கள். அவர்கள் உங்களிடம் அதிக உரிமை எடுத்துக்கொள்வார்கள். நீங்கள் பொறுமையாக நிலைமையைக் கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் சுமூகமான உறவு மேற்கொள்வீர்கள். நீங்கள் அவரிடம் எதிர்மறை உணர்வுகளை வெளிப்படுத்தாதீர்கள்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். உங்கள் பிரியமானவரின் ஆரோக்கியத்திற்காக திடீர் செலவு ஏற்படும்.

## கன்னி

இன்றுநற்பலன்கள்கூடுதலாககிடைக்கும். முக்கிய முடிவுகள் நல்ல பலன்களை அளிக்கும். சிறிய முயற்சிகள் கூட இன்று வெற்றியை அளிக்கும்.

நீங்கள் செய்யும் பணியில் சிறப்பான வளர்ச்சி பெறுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பாக நடந்து கொள்வீர்கள். இதனால் அவரை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

உங்கள் கடின உழைப்புக்குக் கூடுதல் வருமானம் கிடைக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்திருக்கும்.

## துலாம்

இன்று அதிர்ஷ்டம் அதிக அளவு காணப்படும். நீங்கள் எந்தச் செயலை செய்தாலும் அதனை முழுமையாகச் செய்வீர்கள். உங்களிடம் காணப்படும் உற்சாகம் காரணமாக வெற்றி காண்பீர்கள்.

புதிய வேலை வாய்ப்புகள் காணப்படும். வெற்றி காண நீங்கள் இத்தகைய வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

உங்கள் குடும்பத்தில் சுப விஷயங்கள் நடைபெறும். நீங்கள் மறக்க முடியாத தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள்துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள்.

உங்கள் கடின உழைப்பு காரணமாக இன்று பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. இதனால் உங்கள் வருமானம் உயரும்.

## விருச்சிகம்

இன்று சற்று மந்தமான நிலை காணப்படும். நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். நேர்மறை அணுகுமுறை மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

உங்கள் பணியில் வெற்றி காணக் கடுமையாக பே-ராட வேண்டும். உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். பொறுமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். உங்கள் துணையிடம் அன்பாக இருக்க வேண்டும்.

பண வரவு அதிகமாக காணப்படாது. உங்கள் சேமிப்பு அதிகரிக்கவும் குறைந்த வாய்ப்பே காணப்படும்.

கண்களில் பார்வைக் கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளதால் கண் பரிசோதனை செய்துகொள்ள வேண்டியது அவசியம். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

# இன்றைய ராசி பலன்கள் - 13.02.2024




இன்று மந்த நிலை காணப்படும். மனக் குழப்பங்கள் காணப்படும். பாதகமான விளைவுகள் ஏற்படாமல் தவிர்க்க கவனமாக செயலாற்ற வேண்டும். இன்றைய சவால்களை சந்திக்க மிகவும் பொறுமை அவசியம்.

உங்கள் பணிகளை திறமையாக மேற்கொள்வதில் ஏமாற்றங்களோ அல்லது தடைகளோ காணப்படும். சக பணியாளர்களுடன் தொடர்பு கொள்வதிலும் பிரச்சினை காணப்படும்.

உங்கள் துணையுடன் சூடான வாக்குவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது. உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய நடத்தையை தவிர்க்க வேண்டும்.

இன்று சில செலவுகள் நேரலாம். அவை தவிர்க்க முடியாததாக இருக்கும். செலவுகளை கட்டுபடுத்துவது நல்லது.




எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் இன்றைய நாளை சிறப்பாக ஆக்கிக் கொள்ளலாம். புதிய மனிதர்களின் சந்திப்பு மற்றும் தொடர்புக்கு வாய்ப்பு உள்ளது. இதனால் உங்கள் கண்ணோட்டம் விரிவடையும்.

இன்று நீங்கள் பல பணிகளில் மும்மரமாக இருப்பீர்கள். இதனால் பணிகள் அதிகமாக இருக்கும். இந்த நிலைமையை நீங்கள் திறமையாக சமாளிக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு அல்லது வாக்குவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் துணையுடன் நல்லிணக்கம் பராமரிக்க நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். பண விஷயத்தில் இன்று அதிர்ஷ்டம் குறைவாக இருக்கும்.




இன்று அபாரமான வாய்ப்பு காணப்படுகின்றது. உங்கள் இலக்குகளை எளிதில் அடைவதற்கான தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். புதிய வாய்ப்புகள் கிடைக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் இலக்குகளை குறுகிய நேரத்தில் அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் நல்ல புரிந்துணர்வு காணப்படும். ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள உகந்த தருணம்.

உங்களிடம் இருக்கும் பணம் உங்களுக்கு போதியதாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு உயர்வதைக் காண்பீர்கள்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும்.




இன்று மனதில் பதற்றம் காணப்படும். இசை கேட்பதன் மூலம் ஆறுதல் பெறலாம். பிரச்சினைகளைச் சமாளிக்கலாம். வாக்குவாதங்களைத் தவிர்த்து நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

உங்கள் பணிகளைத் திறமையாகக் கையாள கவனமுடன் பணியாற்ற வேண்டும். உங்கள் அலுவலகப் பணிகளை மேற்கொள்ளும் போது பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் நகைச்சுவை உணர்வோடு பேச வேண்டும். உறவைப் பாதிக்கும் தேவையில்லாத விஷயங்களை தவிர்க்க வேண்டும்.

இன்று பண இழப்புக்கான சாத்தியம் உள்ளது. அதிகரிக்கும் செலவுகளை தவிர்க்க இயலாது. இது உங்களுக்கு வருத்தம் உண்டாகும்.





